Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## பாடசாலை பிள்ளைகளுக்கு மதிய உணவின்போது பால்

பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவின்போது ஒரு கிளாஸ் பால் வழங்கப்படவுள்ளதாக விவசாய காணி வனவள அமைச்சர் டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமரின் ஒப்புதலைப் பெற்றிருப்பதாகவும், மில்கோ நிறுவனம், கால்நடை அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன், மாணவர்களுக்கு பால் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 04 | 20-09-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 214

# ஐ. தே. க. தலைமைப் பதவிக்கு மீண்டும் குறிவைக்கும் ஜே. ஆர்!

## தேர்தல் தோல்வியைத் தவிர்க்க வேறு வழி இல்லை என்கிறார்



தனது 88 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடு முகமாக நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டபோதே

"ஐக்கிய தேசியக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போது சந்தித்த ஒரு தோல்வியைப்போன்று இனி மேலும் சந்திக்காதிருக்கவேண்டுமானால், அதன் தலைமைப் பதவியை என்னிடம் வழங்கவேண்டும். அவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினால் மட்டுமே எதிர்காலத்தில் ஐ. தே. கட்சியால் வெற்றியீட்டமுடியும்" இவ்வாறு, முன்னாள் ஐ. தே கட்சி தலைவரும், சிறிலங்காவின் முதல் ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

'லங்கா தீப'' பத்திரிகைக்கு இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி எனக்கு வழங்கப்பட்டிருப்பின் சென்ற பொதுத்தேர்தலின்போது தோல்வியிலிருந்து கட்சியைக் காப்பாற்றியிருப்பேன் எனவும் தெரிவித்தார்,

சரியான ஒரு தலைமை

(6ஆம் பக்கம் பார்க்க)


## தமிழக மாணவன் குற்றாலீஸ்வரன்

## ஜிப்ரோட்ரர் நீரிணையை நீந்திக்கடக்க திட்டம்

(சென்னை)

நீச்சலில் சாதனை படைத்து வரும் பள்ளிமாணவனான குற்றாலீஸ்வரன் இம் மாதம் 27-ம் திகதி ஜிப்ரோட்ரர் நீரிணையை நீந்திக்கடக்க திட்டமிட்டுள்ளார் இது ஆபிரிக்காவையும் ஐரோப்பாவையும் பிரிக்கும் நீரிணையாகும்.

சில மாதங்களுக்கு முன்னர் பாக்குநீரிணையையும் கடந்த மாதம் 15-ம் திகதி ஆங்கிலக் கால்வாயையும் நீந்திக் கடந்து சாதனை படைத்த 12 வயதான இவர் ஓராண்டுக்குள் ஐந்து நீரிணைகளை கடந்து சாதனைபடைக்க திட்டமிட்டுள்ளார் என அவரது தந்தையார் தெரிவித்துள்ளார்.



தியாகி திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்தை தாங்கிய கோட்டை வடிவமைப்பிலான ஊர்தி தென்மராட்சிப் பகுதியில் பவனி வருவதையும் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் காவடி ஆட்டம் இடம் பெறுவதையும் படத்தில் காணலாம்.

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க படுதோல்வி அடையும்

### முன்னாள் ராஜாங்க அமைச்சர் ரணசிங்கா

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் முடிவு என்ன ... களைப் பெறுவார்கள் என்பது இன்று மிகத் தெளிவாகத் தெரிந்த விடயம் என ... பதித் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் தோல்வியானது இதுவரை இக்கட்சி கண்டி ...

வீரச்சாவு



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் முடிவு என்ன என இன்று முழு நாட்டுக்கும் தெரியும். பொதுத்தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணிபெற்ற வாக்குகளை விட பெரியளவிலான வாக்கு

பது இன்று மிகத் தெளிவாகத் தெரிந்த விடயம் என முன்னாள் தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதி

யக் கட்சியின் தோல்வியானது இதுவரை இக்கட்சி கண்டிராத அளவுக்கு படு மோசமான தோல்வியாக அமையும் என்றும் இந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்

- தொண்டமான்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது தம்மால் ஆன ஒத்துழைப்பை நல்க தயாராக இருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

''திவயின'' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கம் முதலில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் அபிலாசைகள் என்ன என்பதை குறித்து தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே இப் பிரச்சினைக்கான ஓர் தீர்வுக்கு வழிவகுக்கும். இதேவேளை இது தொடர்பாக ஒரு தெளிவான கொள்கையையும் அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இந்த நிலையில் தான் இப் பேச்சு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவத்திற்கு அதிகபணம்செலவிடும் நாடுகளுக்கு நிதிஉதவியை நிறுத்துக

## உதவிவழங்கும் நாடுகளுக்கு ஐ. நா. சபை கோரிக்கை

மக்களின் நலன்களை விட இராணுவத்திற்கு அதிக பணத்தை செலவிடும் நாடுகளுக்கான நிதி உதவியை குறைத்துக் கொள்ளுமாறு அல்லது நிறுத்துமாறு உதவி வழங்கும் நாடுகளை ஐ. நா சபை கேட்டுக்கொண்டுள்ளது

ஐ நாவின் இவ் வேண்டுகோளுக்கு அமைய உதவி வழங்குவதற்கான தமது நிலைப்பாட்டை உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் நிர்ணயிக்கவுள்ளன உதவி வழங்கும் நாடுகள் உதவி பெறும் நாடுகளை நன்கு பரிசீலித்த பின்பே உதவி வழங்க வேண்டும் என ஐ நா வலியுறுத்தியுள்ளது

# ரணிலை கொலைசெய்ய இருமுறை முயற்சியாம்!

(கொழும்பு)

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக்கட்சி முக்கியஸ்தருமான ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்ய இருமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது-

சென்ற மாதம் 28-ம்திகதி களுத்துறை உல்லாசப்பயணிகள் விடுதியில் ரணில் விக்கிரமசிங்க தங்கியிருந்தபோது அவரின் பாதுகாப்பு உத்தியோகஸ்தரை இனம் தெரியாத நபர் ஒருவர் பின் தொ

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கவில் இணைய பிரேமாவின் மகள் விருப்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயல்பட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் விருப்பம் தெரிவித்துள்ளார் என 'சிலுமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான விண்ணப்

(6ஆம் பக்கம் பார்க்க)



2-ம் லெப். தாசன் (தாஸ்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவங்கேணி எனும் இடத்தில்கடந்த 17-ம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப். தாசன் / தாஸ் (சின்னாச்சி அன்னதாஸ், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

## தியாகி திலீபன் உருவப்படம் உள்ளே

லெப். கேணல் தியாகி திலீபனின் உருவப் படம் இன்றைய ஈழநாதம் தினசரியுடன் இணைப்பாக வெளிவருகிறது.

## 1000 அகதிகள் புறப்பட்டனர்

தமிழ் நாட்டின் முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார்1000 பேர்கொண்ட குழுவினர் நேற்று சென்னையிலிருந்து கப்பலில் திருகோணமலை நோக்கி புறப்பட்டுசென்றனர்

# அரசாங்கத்தின் பிரதிநிதி இவ்வாரம் யாழ். வரலாம்

## கொழும்பு வார இதழ் தகவல்

(கொழும்பு)

இந்த வார மத்தியில் விடுதலைப் புலிகளுடனான பூர்வாங்க பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக அரசின் பிரதிநிதியாக லயனல் பெர்ணாண்டோ யாழ் செல்லலாம்என கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

யாழ் அரசாங்கஅதிபர் கே. மாணிக்கவாசகருடன் அவர் யாழ் வரலாமெனவும், அவ் இதழ் தெரிவித்துள்ளது-

யாழ் குடாநாட்டுப் போக்குவரத்து பாதை திறப்பதிலும் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அகதிகளை மீள குடியேற்றுவதிலும் இராணுவத்திலிருந்து எழுந்த சிக்கல்களால் இவரது விஜயம் பிற்போடப்பட்டு வந்ததாகவும், லயனல் பெர்ணாண்டோவின் விஜயத்தின்போது பிரதமரின் உத்தேசயாழ்விஜயம்தொடர்பாக முடிவு செய்யப்படலாம் எனவும் அவ் வார இதழ் மேலும் தெரிவித்துள்ளது-

# வட-கிழக்கு அபிவிருத்தி உலகவங்கி உதவி வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் உலகவங்கி உதவியளிக்கும் என தான் நம்புவதாக உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் தற்போதைய அரசு மேற்கொள்ள திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் உலகவங்கியைத் திருப்திப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் மனித வள அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்புடன்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் நினைவு நாள்கள் வடமராட்சியில் சிறப்புற அனுஷ்டிப்பு

(வடமராட்சி)

தமிழீழ தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்ததன்மூலம் தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களினையொட்டி வடமராட்சி எங்கும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி நகரப்பகுதிகள் மட்டுமன்றி கிராமப் பகுதிகள் போன்ற அனைத்து இடங்களிலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இப் பகுதிகளில் பொதுமக்களின் வீடுகள்தோறும் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அலங்கரிக்கப்பட்ட நினைவுப் பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. படங்களின் முன்னால் அணையாத தீபம் ஏற்றப்பட்டுள்ளது.

வடமராட்சியில் திலீபனின் நினைவாக ஐந்து பிரதான உண்ணாவிரதப் பந்தல்கள் அமைக்கப்பட்டு நோன்பு நடைபெற்று வருகின்றது. பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் ஆலய முன்றலிலும் கரவெட்டி வட்டத்தில் கலிகை ஆலய முன்றலிலும், உடுப்பிட்டி வட்டத்தில்உடுப்பிட்டி ஞானவைரவர் ஆலய முன்றலிலும் வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் வல்வெட்டித்துறை நெடியகாடு அம்மன் ஆலயத்திலும், வடமராட்சி கிழக்கிலும் உண்ணாவிரதம் நடைபெற்று வருகிறது.

இப் பந்தல்களில் வர்த்தகர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பலரும் இணைந்து நோன்பு இருந்து வருகின்றனர். கிராமப் பகுதிகளில் இருந்து பிரதான பந்தல்களுக்கு கரகம், காவடி எடுத்து வரப்பட்டு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படுகிறது.

இவ் உண்ணாவிரத பந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

ஒரு வளர்ப்பான நல்ல ஜேர்மன் ஷெப்பேர்ட் இன அல்சேசன் நாய், கூட்டுடனும், இரண்டரை அடி நீள கண்ணாடி மீன் தொட்டியும், உபகரணங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 24, குமாரசாமி, வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம். (9453)

### பாலர் ஆசிரியராகலாம் ...

கடைசித்தகைமை க.பொ.த. (சா/த) சனி,ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9449)

### ஆனந்தம் தயாரிப்புகள்

சத்-சித் ஆனந்தம்-சத்தாக இருக்கும் உண்மைப் பொருளை எமது சித்தத்தால் அறிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதே போல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம் பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள் கேட்டு வாங்குங்கள் ஆனந்தம். (சி-10289)

### வேப்பம். இலுப்பம் விதை

சுத்தமான வேப்பம் விதை, இலுப்பை விதை வாங்குகிறோம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கொடுக்கலாம். 'மில்க்வைற்' (சி-10371)


### தரிசுக் காணிகள் விநியோகம்

94,95 ஆண்டு கால போக நெற்செய்கையை மேற்கொள்ள விருக்கும் காணியற்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா கோட்டத்தினர் தரிசுக் காணிகளை விநியோகித்து வருகின்றனர்.

நெற்பயிர்ச் செய்கையை


### அச்சக முகாமையாளர் தேவை

பிரபலமாக இயங்கி வரும் அச்சகமொன்றிற்கு அச்சகத்துறையில் அனுபவம் உள்ள முகாமையாளர் தேவை. தகைமை விபரங்களுடன் 27-09-94க்கு முன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நைத்தொழிற் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.
(சி-10375)

### தவறிவிட்டது

17-09-94 சனிக்கிழமையன்று கிளாலிக் கரையிலிருந்து டஸ்வண்டியில் பிரயாணம் செய்கையில் இள நீலப் பிரயாணப்பை ஒன்று தவறி விட்டது. இதே பையைப் போன்ற பை சிற்றூர்தி சங்க இணையத்தில் உள்ளது மாற்றி எடுத்தவர்கள் தயவு செய்து சிற்றூர்திச் சங்க இணையத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மணியழகன்
வட்டுமேற்கு வட்டுக்கோட்டை
(9458)

### தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு உணவு வகைகள், சிற்றுண்டிகள் பம்பே சுவீற்ஸ் என்பன செய்யக் கூடிய ஆட்கள் தேவை. 05 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
27-09-94 க்குமுன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

விளம்பர இல:- 350
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்
(சி- 10376)


### அறிவித்தல்

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை
எம்மண்ணின் மலர்விற்காக உண்ணா
நோன்பிருந்து சகச்சாவடைந்த

## லெப். கேணல் தியாகி திலீபன்

அவர்களின் 7-ம் ஆண்டு அடையாள உண்ணா நோன்பின் 9-ம் நாளினை சிறப்பிக்கும் முகமாக நாளை 21-09-94 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் யாழ் மாவட்ட கூட்டு

## அமைச்சர் பதவி என்பது எனக்கு அவசியமல்ல

### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற மனஉறுதியும் ஆர்வமும் இருந்தால் போதுமானது. அதற்காக அமைச்சர் பதவி அவசியமானதல்ல என இரத்தினபுரி மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற காலம் மலையேறிவிட்டது. எமது ஆட்சியில் ஊழல், லஞ்சம் ஏதாவது நடந்தால் அதற்கு எதிராக முதலாவதாக குரல் கொடுப்பவன் நானாகவே இருப்பேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சமூக நலத் திட்டங்கள் பற்றி புதிய யோசனைவேண்டாம்

### பிரதமர் சந்திரிகா பணிப்பு

சமூக நலத் திட்டங்கள் தொடர்பாகவோ அல்லது அரசு முதலீடு செய்யக்கூடிய திட்டங்கள் தொடர்பாகவோ புதிய யோசனைகள் எதையும் இவ்வருடம் முன்வைக்க வேண்டாம் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தனது அமைச்சர்களுக்கு பணிப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் விட்டுச் செல்லப்பட்ட காலியான திறைசேரி காரணமாகவே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, திறைசேரியின் செயலாளரான ஏ. எஸ். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சென்ற அரசு, கோடிக்கணக்கான ரூபாய்களை திறைசேரி மூலம் செலவு செய்திருந்தது. இந்தப் பற்றாக்குறையை நீக்க, திறைசேரி பண நோட்டுக்களை மேலதிகமாக அச்சிட முனைந்தது இது மேலும் பண வீக்கத்தை ஏற்படுத்துமாகையால், பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் அத்திட்டத்தை தான் நிராகரித்ததாகவும் ஜெயவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

## ஐரோப்பாவில் தமிழ் இலக்கியச் சந்திப்பு

பத்தொன்பதாவது ஐரோப்பிய தமிழ் இலக்கிய சந்திப்பு இம் மாதம் 24-ம் 25-ம் திகதிகளில் லண்டன் கொன்வே ஹாலில் நடைபெறவுள்ளது. இச் சந்திப்பில் முதல் நாள் நிகழ்ச்சியில் புகலிட இலக்கியம், தமிழ் பெண்களும் புலம் பெயர்வும், நமது சமூகத்தின் அடிப்படைகளைத் தேடி, மெல்லிசை என்பனவும். இரண்டாம் நாள் ஈழத்து இலக்கியம், நூல் அறிமுகம், நாடகம் என்பனவும் நிகழவுள்ளது. இறுதியில் இருபதாவது இலக்கிய சந்திப்பிற்கான தெரிவுக் குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளது.

## பனைவள அபிவிருத்திக்கு உதவுமாறு வேண்டுகோள்

கற்பகச் சோலை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பனை நடுகைக்கான பனை விதைகளை சேகரித்து பனைவள அபிவிருத்திக்கு உதவுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டில் ''கற்பகச்சோலை' என்னுந் திட்டத்தின்கீழ் 5 இலட்சம் பனை விதைகளை நாட்டுவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளமை யாவரும் அறிந்ததே.

இத்திட்டத்தினை இலகுபடுத்தும் நோக்கோடு கிராம நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள், புனர்வாழ்வுக் கழகங்கள், சாரணர் குழுக்கள் மற்றும் பல்வேறு பொதுஸ்தாபனங்கள் ஊடாக இவற்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

இப்பாரிய வேலைகளை மேற்கொள்ள அதிகளவு பனம் விதைகள் தேவைப்படுகின்றது எனவே இக் காலபோகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய பனம் விதைகளைச் சேகரித்து உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுவிடமோ அல்லது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட கோட்ட அலுவலகங்களிலோ ஒப்படைத்து நாட்டின் பனைவள அபிவிருத்


## நினைவு கூருகின்றோம்...

### 20-09-1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் எமைப் பிரிந்த,
★ **சோமசுந்தரம் சுந்தரலிங்கம்** (மட்டு)

1986-ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**வசந்தன்** (கு. பாலேஸ்வரன் - - -)

1990-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,
**கண்ணன்** (கனகசபாபதி பரமானந்தன் - - -)

1991ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**சூரியா** (யோகேஸ்வரி அம்பலவாணபிள்ளை - மூதூர் திருமலை)

1993-ம் ஆண்டுமன்னார் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,
**கப்டன் பரதன - பரத்** (சந்தான் அந்தோனி மகேந்திரன்- நறுவிலிக்குளம் - மன்னார்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

இவ்வேளை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10370)

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்

தோற்றம்
11-9-1935

மறைவு
21-8-1994



கொள்ளப்படும் இந் நடவடிக் கையின்கீழ் பயன் பெறவிரும் பும் காணி அற்றோர் அல் லது காணி தேவைப்படு வோர் கிராமிய உற்பத்திக் குழுக்களூடாகவிண்ணப்பித்து பயன்பெறத்தக்கவாறு இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக தெரியவரு கிறது.

யாள உண்ணா விரதத்தில் அனைத்து கூட்டுறவாளர் களையும், கூட்டுறவுப் பணியாளர்களையும்கூட்டுறவுப் பயிற்சிகல் லூரிமாணவர்களையும், கூட்டுறவு சபையின் பணிப்பாளர்களையும், பணியாளர்களையும், பொதுமக் களையும் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டு சிறப் பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

-நன்றி-

செயலாளர்

(சி-10373)

மிய உற்பத்திக் குழுக்கள் பனை தென்னைவள அபிவிரு த்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை அபிவிருத்திச்சபை, பல திக்கு உதவுமாறு அனைத்து மக்களையும் தமிழீழபொருண் மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

## கிளிநொச்சி, முல்லையில் இலவச கண் பரிசோதனை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும், முல் லைத்தீவு மாவட்ட வைத்தி யசாலையிலும் நெதர்லாந் தின் கண் வைத்திய நிபுணர் களால் இலவசமாக கண் பரி சோதனை செய்யப்படவுள் ளது. இதற்கான ஏற்பாடுக ளை இலங்கை செஞ்சிலுவை சங்கம் மேற் கொண்டுள்ளது கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலையில் எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளி லும், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் எதிர் வரும் வெள்ளி, சனிக்கிழ மைகளிலும் இப் பரிசோத னை மேற் கொள்ளப்படவு ள்ளது. பரிசோதனையின் பின் தேவைப்படுபவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளும் வழங் கப்படவுள்ளது இப் பரிசோ தனையின் போது வறிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட இருப்பது குறிப் பிடத்தக்கது.



## சின்னத்தம்பி மகேஸ்வரி
### (பத்தைமேனி அச்சுவேலி)

21-8-94-இல் இயற்கை மரணமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைதெரிவித் துக்கொள்வதுடன் புத்தூரில் மகளின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (20-9-94) காலை 9-00 மணிக்கு நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து மதிய போ சனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

பத்தைமேனி, அச்சுவேலி — -சின்னத்தம்பி குடும்பத்தினர்.

(9459)


## தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப்படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும்

முன்னணி நிறுவனம்

# ★ படமாடம் ★

சகலவிதமான

- ★ பூக்கண்ணாடி
- ★ சாதாரண கண்ணாடி
- ★ இனிப்பு கண்ணாடிப் பெட்டிகள்
- ★ மீன் தொட்டிகள்
- ★ 24X36 1/2 நூல் கண்ணாடி
- ★ 1 நூல் கறுப்புக்கண்ணாடி
- ★ 1/4 ,, கறுப்புக்கண்ணாடி
- ★ 1/2 நூல் பிறேம் கண்ணாடி

ஆகியவற்றை மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**படமாடம்** அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10374)


## மலையக மக்களுக்காக பதவிதுறக்க தயங்கேன்

- பெ. சந்திரசேகரன்

(ஹட்டன்)

பிரதி அமைச்சர் பதவி எனக்கு வழங்கப்பட்டிருந்தா லும், இதற்காக எப்போது நான் அரசாங்கத்துக்கு வக் காலத்து வாங்குபவனாக இரு க்கமாட்டேன். மலையக மக்க ளுக்கு பிரச்சினை என்றால் பதவியைத்தூக்கி எறியத்தய ங்க மாட்டேன் என, மலை யக மக்கள் முன்னணியின் தலைவரும் பிரதி அமைச்ச ருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இராகலையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையில், இந்த மந்திரிப்பதவியினால், மலையக மக்களுக்கு எல்லா வற்றையும் செய்துவிட முடி யும் என நான் உறுதிகூற மாட்டேன், ஆகவே எல்லா அமைச்சுக்களிலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அமைப்புஒன்று வேண்டுமென்று அரசைக் கேட்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## மோசடி செய்த நபருக்கு 19 ஆண்டு சிறைத்தண்டனை

(மாத்தளை)

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி பதினொரு பேரை ஏமா ற்றிய ஒருவருக்கு பத்தொன் பதரை ஆண்டுகள் சிறைவா சம் அனுபவிக்கும்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பேருவளையைச் சேர்ந்த நபரொருவருக்கே மாத்தளை மாவட்ட நீதிமன்றம் இத்தண் டனையை வழங்கியுள்ளது.

உ
சிவமயம்
கொக்குவில்

## பொற்பதி விநாயகர் ஆலயம்
## பைரவர் பொங்கல் உற்சவம்
### 20.09. 1994

விநாயகர் அடியார்களே!

நிகழும் பவ வருஷம் புரட்டாதித் திங்கள் 4-ம் நாள் (20-09-1994) செவ்வாய்க்கிழமை நடைபெற விருக்கும் மேற்படி உற்சவத்தில் அனைத்து விநாயக அடியார்களும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டுகி றோம்,

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பி-பகல் 3-00மணி | ஸ்நபன அபிஷேகம் |
| மாலை 4-15 மணி | விசேஷ பூசையும் பைரவர் வீதி உலா வருதலும் |
| இரவு 7-00 மணி | விசேஷ நாதஸ்வர தவில் கச்சேரி கே ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர் |
| இரவு 9-00 மணி | வயலின் சோலோ ஜெயராமன் குழுவினர் (நாச்சிமார் கோவிலடி) |
| இரவு 10-30 மணி | வில்லிசை சின்னமணி குழுவினர் |

இங்ஙனம்
பொற்பதி இளைஞர்கள்

(9463)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## நிழல் மரங்களுக்கு விஷமிகளால் சேதம்

(குருநகர்)

நவாலி கடற்தொழிலாளர்களின் காக்கை தீவு குடாவாடிப் பகுதியில் நிழல்தருவதற்காக நாட்டப்பட்ட பூவரசம் மரங்களை இரவு வேளைகளில் விசமிகள் தறித்து எடுத்துச் செல்வதாக மேற்படி வாடியைச் சேர்ந்த மீனவர்கள் தெரிவிக்கின்றனர்

இதேபோல் கரையோரப் பகுதிகளில் நாட்டப்பட்ட மேலும் பலவகைபான நிழல் மரங்கள் இரவு வேளைகளில் சறித்து எடுத்துச் செல்லப்படுவதாகவும் புகார் செய்யப்படுகிறது.

இவ்வாறு அழிவு வேலைகளில் ஈடுபடுவோரைக் கண்டறிவ டன் மரங்களைக் காப்பாற்றவும், மேலும் அப்பகுதிகளில் மரங்களை நாட்டி வளர்க்கவும் முடியாது இருப்பதாகவும் கவனல தெரிவிக்கப்படுகிறது. (21)

## வெவ்வேறு தினங்களிலேயே பரீட்சைகள் நடத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் தர அதிபர்களுக்கான இலங்கை கல்வி நிருவாக சேவைப் பரீட்சை, மற்றும் பாடசாலை அதிபர்களுக்கான தகுதிகாண் பரீட்சை ஆகிய இரண்டையும் வெவ்வேறு தினங்களிலே இனிமேல் தாம் நடத்த போவதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

சில பாடசாலை அதிபர்கள் இவ் இரு பரீட்சைக்கும் தோற்றவிருப்பதால் தான் இந்த முடிவை தான் எடுத்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(நி) (88,

## அரச ஊழியர் வெற்றிடம் உடன் திரட்டப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல அரசாங்கக் காரியாலயங்கள், மற்றும் திணைக்களங்களில் உள்ள ஊழியர் வெற்றிடங்களை திரட்டுமாறு அமைச்சு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

சிற்றூழியர்களிலிருந்து உயர் அதிகாரிகள் வரை வெற்றிடங்களாக உள்ளவற்றை ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக திரட்டி அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திரட்டப்படும் வெற்றிடங்களின் பட்டியலைக் கவனித்து ஆராய்ந்த பின்னர் விரைவில் வெற்றிடங்களை புதிய நியமனங்கள் மூலம் நிரப்புவதற்கு புதிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள சகல அரச திணைக்களங்களின் வெற்றிடங்களும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

(தி) (88)

## 'ரெபியா' அதிகாரசபைமீது அதிகாரிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரெபியா' அதிகார சபை பாரபட்சம் காட்டுவதாகவும், சிலருக்கு சலுகை காட்டுவதாகவும், சிறந்த முறையில் அது செயற்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பத்தாயிரத்திற்கும் அதிகமான, அரசாங்க ஊழியர்கள் இனக்கலவரம் மற்றும் இராணுவ நடவடிக்கை என்பனவற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில் நஷ்ட ஈட்டிற்காக எதிர்பார்த்துள்ளனர். எனினும் இது விடயத்தில் தேவையற்ற தாமதமும் காட்டப்படுவதாக இவ் அரசாங்க ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குமாறு ரெபியா நிறுவனத்திற்கு புனர்வாழ்வு, புனரமைப்புதுறை அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## வவுனியா பல்கலைக்கல்லூரி அமைதி அட்டைவிநியோகம்

### மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பு

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு 9 வருடங்களாகியும் கிட்டவில்லை

(கொழும்பு)

மட்டக்களப்பு விமான நிலைய விரிவாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்ட ஈடோ, நிவாரணமோ ஒன்பது ஆண்டுகள் கழிந்த போதும் இன்னமும் வழங்கப்படவில்லை.

உரிய நட்டஈடு வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடப்பட்ட போதும் வழங்கப்படவில்லை என்று விமானப் படை வளாக விரிவாக்கத்தால் பாதிக்கப்பட்டோர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, 1985 ஆம் ஆண்டு அவசர காலசட்டத்தின் கீழ் மட்டக்களப்பு விமான நிலையத்திற்காக அதைச் சூழவுள்ள ஐந்நூறு மீற்றர் காணிகள் சுவீகரிக்கப்பட்டு வீடு, வாசல், உடைமைகள் சேதமாக்கப்பட்டன. இப் பாதிப்புகளுக்கான நட்டஈடு இன்னமும் வழங்கப்படவில்லை நட்டத்தை மதிப்பிடுவதற்காக பதுளை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகள் அங்கு கவனிப்பாரற்று கிடக்கின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்டோர் சங்கம் பதுளையுடன் தொடர்பு கொண்டபோது ஜே வி பி. யினரின் நடவடிக்கையின் போது இம் மதிப்பீட்டு ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டதாகவும், கொழும்பிலுள்ள பிரதம மதிப்பீட்டாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக எதுவிதமான நிவாரணமும் கிடைக்காமையால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

## வட - கிழக்கு மக்களின் பாதிப்பு உடன் போக்கப்படவேண்டும்

### லண்டன் மாநாட்டில் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்தினால் அப்பகுதி மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உடனடியாக பாதிப்பிலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் எனவும் லண்டனில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு சுகாதாரம் தொடர்பான மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது-

இரு தினங்களாக நடைபெற்ற இம் மாநாட்டின் ஆரம்ப தினம் நேற்று முன்தினம் லண்டன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. இதில் இலங்கையிலிருந்து பதினைந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமையும் இதனை உடனடியாக எவ்வாறு தீர்க்க முடியும் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக அதில் கலந்து கொண்ட அணியின் தலைவர் எஸ். பாலகிருஷ்ணன் தெரிவித்தார்-

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அப் பகுதி மக்கள் மட்டும் அன்றி இலங்கையில் தமிழ் மொழி பேசும் மக்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்-

## நடைமுறையிலுள்ள பரீட்சை முறை மீள் பரிசீலனைக்கு உள்ளாகும்

(கொழும்பு)

அநாவசிய பரீட்சைகளை நீக்கி விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் இருந்துவரும் பரீட்சை முறைமைகள் குறித்து சரிவர விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன தெரிவித்தார்.

கொழும்பில் பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் ஊழியர்களிடையே நீண்ட நேரம் உரையாடுகையில் அமைச்சர் இந்த விடயம் பற்றி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு இனிமேல் பரீட்சைகள் நடாத்தப்படமாட்டாது கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களில் பல்கலைக் சழகங்களுக்கு பிரவேசிக்க முடியாமல் போனவர்களுக்கு அவர்களின் திறமைகளின் அடிப்படையில் இதற்கான தேர்வு இடம்பெறும் ஆசிரியர் கல்விச்சேவை நிலையத்தில் ஆறு வருட பயிற்சி நெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் சம்பந்தமாக அவர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாணவர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையில் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது இருந்த போதிலும் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை தொடர்ந்து நடைபெறும், தொண்டர் அல்லது பயிற்சியாளர் அடிப்படையில் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளும் முறை விடப்படும் எனவும் அரசியல் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களும் கைவிடப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## கனடா விசா வழங்கலில் புதிய கட்டுப்பாடுகள்

(ஒட்டாவா)

கனடியர்களினாலும் கனடாவில் குடிபுகுந்துள்ள வெளிநாட்டு குடியேற்ற வாசிகளாலும் அனுசரணை உத்தரவாதம் வழங்கி வரவழைக்கப்படும் வாழ்க்கைத் துணைகளுக்கும் (கணவன் அல்லது மனைவி) பிள்ளைகளுக்குமே கனேடிய விசா வழங்கும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது-

கனேடியர்கள் அல்லது கனடாவில் குடியேறியவர்களின் பெற்றோர், பாட்டன் பாட்டியர், சகோதர சகோதரிகளுக்கு விசா வழங்கும் விடயத்தில் இரண்டாம் பட்ச அக்கறையே காட்டப்பட வேண்டுமென மேலும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## மன்னாருக்கு தரைப்பாதை திறக்க ஆலோசனை

(மன்னார்)

மன்னாரிலிருந்து கொழும்புக்கும் ஏனைய இடங்களிற்குமான தரைமார்க்கப் பயணப் பாதையை திறப்பதற்கு தற்போது ஆலோசிக்கப்படுகிறது

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்த மன்னார், தள்ளாடி முகாமுக்கு கடந்த வியாழனன்று சென்ற போது இது குறித்து இராணுவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததாகவும் தெரிய வருகிறது'

தரைமார்க்கப் பிரயாணம் மாந்தை பரப்புக்கடந்தான் பாதை வழியாகவே மேற்கொள்ளப்படவேண்டுமென இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது-

## விஜயகுமாரதுங்க தினத்தை விடுமுறையாக அறிவிக்குக

### ஒஸி கோரிக்கை

[கொழும்பு]

செப்டம்பர் 26 ஆம் திகதியை முன்னாள் பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காவின் நினைவு விடுமுறை தினமாக பிரதமர் சந்திரிகா அறிவித்ததை தொடர்ந்து பெப்ரவரி 16 ஆம் திகதி விஜயகுமாரதுங்க நினைவுதின விடுமுறையாக அறிவிக்கும்படி குமாரதுங்க நினைவு நிறுவக அமைப்பாளர் ஒஸி அபயகுணசேகர பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவை கோரியுள்ளார்.

## வட பகுதிக்கு மின்சாரம் மதிப்பீட்டு வேலை ஆரம்பம்

(கொழும்பு)

வட பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான அடிப்படை மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு இருக்கின்றன. வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரையிலான பதினைந்து மைல் தூரத்திற்கு தேவையான மின் கம்பிகளின் மதிப்பீடு பற்றியும் அவற்றை திருத்துவது பற்றியும் மின் சக்தி துறை அமைச்சு ஆராய்ந்துள்ளது. இதே வேளை மின் விநியோகம் தொடர்பாக ஆராய உயர் அதிகாரி ஒருவரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் குடியேறினார்

சாதாரண மதச் சடங்கு ஒன்றைத் தொடர்ந்து பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அவரது உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகையில் குடியேறியுள்ளார். கடந்த புதன்கிழமையன்று தொடக்கம் அவர் அலரி மாளிகையில் வசித்து வருகிறார்.

## ஹேமாவின் ஆதரவுபெற

நீண்ட நேரம் உரையாடுகையில் அமைச்சர் இந்த விடயம் பற்றி குறிப்பிட்டார்.

யை மேற்கொள்ளும் மாணவர்கள் சம்பந்தமாக அவர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்

நியமனங்களும் கைவிடப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# வவுனியா பல்கலைக்கல்லூரி அனுமதி அட்டை விநியோகம்

(மானிப்பாய்)

வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் அனுமதி பெறத்தகுதியுடைய மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அனுமதி பெறத்தகுதியுடைய மாணவர்கள் தங்களை பதிவு செய்து கொள்ள வரும்போது தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாஸ்போர்ட் அளவுகொண்ட 5 போட்டோ படப் பிரதிகள், பாடசாலை விடுகைப் பத்திரம் மற்றும் அனுமதி அட்டை ஆகியவற்றினை கொண்டு வரும்படி பதிவாளரினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

மேலும் பதிவு செய்ய வரும் மாணவர்கள் பதிவுக்கட்டணமாக 110/- ஐ செலுத்த வேண்டும் கணக்கியலிலும் நிதியியலிலும் டிப்புளோமா செய்ய தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களை நவம்பர் 7ம் திகதி மேற்குறித்த ஆவணங்களுடன் பதிவு செய்யுமபடி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள், திருகோணமலை இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவு செய்யும் திகதி செப்டெம்பர் 16 என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (07)

# உலகவங்கி மாநாட்டில் சந்திரிகா பங்கு கொள்வார்?

(கொழும்பு)

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் எதிர்வரும் ஒக்டோபர் 4,5,6ஆம் திகதிகளில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா சம்மதம் தெரிவித்துள்ளார்-

எனினும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால் இவ் விஜயம் ரத்தாகலாம் என கூறப்படுகிறது-

# பங்களாதேஷில் ஒதுங்கிய இலங்கை மீனவர் மரணம்

(கொழும்பு)

தென்னிலங்கை மீனவர் ஒருவர் சுமார் ஒரு மாத காலம் வங்கக் கடலில் தத்தளித்து பங்களாதேஷ் சென்று ஒதுங்கியதும் அங்கு மருத்துவமனையில் நேற்று முன்தினம் இறந்தார்.

பட்டினி மற்றும் உடல் நீர் இழப்பு காரணத்தாலும் இவர் இறந்ததாக கூறப்படுகிறது. இவருடன் மீட்கப்பட்ட மற்றுமொரு மீனவர் சிட்டகொங் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர்கள் கடந்த வாரம் பங்களாதேஷில் மீட்கப்பட்டனர்.

இவர்கள் கடலில் ஒரு மாத காலம் தத்தளித்தபோது பச்சை மீனை உண்டு கைவசமிருந்த குடிநீரை கொஞ்சம் கொஞ்சமாக குடித்தே காலம் தள்ளினர். மொத்தம் மூவர் இப்படகில் இருந்தனர். படகு இயந்திரக்கோளாறு காரணத்தால் நடுக்கடலில் நின்றுவிட்டதாக கூறப்படுகிறது.

ஒருவர் பசியாலும் விரக்தியாலும் கடலில் குதித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருப்திபடக் கூடிய தீர்வும் அமுலாக்கும் துணிவும் அவசியம்

## கொழும்பு பத்திரிகை கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு, இன்று அரசும் புலிகளும் திருப்தியடையக் கூடிய தீர்வு ஒன்றினைக் காண்பதே முக்கியம் காணும் தீர்வில் இருசாராரும் தவறாமல் இறுதி வரை தளராமல் துணிவுடன் நடைமுறைப்படுத்த முயல வேண்டும் அப்போது தான் நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் மலரும் என கொழும்பு பத்திரிகையொன்று தன் ஆய்வுரைக்கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.

இன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அறிவாளிகளும், அரசியல்வாதிகளும் தாங்கள் தமிழர்களுக்கு கொடுக்கக் கூடிய எல்லாவற்றையும் வழங்கி விட்டோம், இனிமேல் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்றும். தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை அவர்கள் சமாதானமாக நாடெங்கும் வாழ்கின்றனர் என்றவாறு கூறி வருவதையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள், குறைகள் உண்டு அதனால்தான் ஆயுதங்களை ஏந்தினார்கள், பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு கண்டால் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை நிறுத்திக் கொள்வார்கள், இதற்கு இராணுவ முனைப்பு தேவையற்றது எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இலங்கை செஞ்சிலுவைக்கு நேர்வே உதவி நிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா செஞ்சிலுவை சங்கத்தில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீன நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கான அனைத்து உதவிகளையும் நேர்வே செஞ்சிலுவை சங்கம் நிறுத்தியுள்ளது

சிறிலங்கா செஞ்சிலுவை சங்கத்தில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் குறித்து விரிவாக ஆராய இரு சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர். இங்குள்ள செஞ்சிலுவை சங்க நிதிநிலை குறித்து உள்ளக கணக்காய்வு செய்தபோதே மேற்படி ஒழுங்கீனம் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நேர்வே செஞ்சிலுவைச்சங்கம் இலங்கையில் ஏழு புனர்வாழ்வு திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# விடுவிக்கப்படுபவர்கள் பற்றி அரசின் கவனம் தேவை

தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய முக்கியத்தர்களை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கம் மிகவும் கவனமுடன் செயற்பட வேண்டும் இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' இதழ் தனது ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கம் பலமான நிலையில் இருந்து கொண்டுதான் பேச்சு நடத்துகிறது என்பதை உணரவைக்கவும், இராணுவத்தை பலவீனப்படுத்தும் செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும் திருமதி சந்திரிகா உத்தரவாதம் அளிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதமர் திருமதி சந்திரிகா இதுவரை மேற்கொண்ட துணிச்சலான நடவடிக்கைகளையும் இராணுவத்தின் உயர் மட்டத்தினரின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் நம்பிக்கை ஊட்டும் முயற்சிகளையும் அப்பத்திரிகை பாராட்டியுள்ளது.

# தங்கப் பதக்கம் வென்றார்

சைவ பரிபாலன சபை அகில இலங்கைரீதியில் 1993-ல் நடத்திய சமயபாடப் பரீட்சையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி தர்சினி ஜெபரத்தினம் முதலிடம் பெற்றுள்ளார். இவருக்கு நேற்றுமுன்தினம்நடைபெற்ற பரிசளிப்பின் போது தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

# ஹேமாவின் ஆதரவு பெற காமினி சந்தித்து பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள காமினி திசாநாயக்கா அவரது மனைவியுடன் சென்று திருமதி ஹேமா பிரேமதாசாவின் ஆதரவைக் கோரினார்.

இதேவேளை ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்றுள்ள அனைத்துக் குழுக்களையும் மீள ஒருங்கிணைத்து ஐ.தே.கவின் பிரசார களத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளிலும் காமினி திசாநாயக்கா ஈடுபட்டுள்ளார்.

# நட்சத்திர ஹோட்டலில் கண்ணாடி விழுந்து காயம்

(கொழும்பு)

கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் 15 அடி நீளமான கண்ணாடி உடைந்து விழுந்ததில் இரண்டு முக்கிய பிரமுகர்கள் படுகாயமடைந்துள்ளனர். பிரபல கட்டிடக் கலைஞரான மில் றோய் என்பவரும், பொறியியலாளரான டபிள்யூ ஜே.எம். ஜெயவர்த்தனா என்பவருமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

பொல்கொல்ல நீர்த்தேக்க திட்டத்தின் சிற்பியான மில் றோய் இச் சம்பவத்தில் தமது ஒரு கண்ணை இழந்திருப்பதுடன் கடும்காயங்களுக்கும் இலக்காகியுள்ளார். கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் விசேட சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டுள்ளார். ஜெயவர்த்தனா ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்ட போதும் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர கவனிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் பிரபலமான ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹோட்டல் கலதாரியில் கடந்த வெள்ளியன்று நண்பகலில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு-கிழக்கு ஆளுநராக தமிழரை நியமிக்க தயக்கம்

## ஜனாதிபதிக்கு இருக்கிறதாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிப்பதென பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா எடுத்த தீர்மானத்தை ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டி வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு ஆளுநராக இருந்த லயனல் பெர்னாண்டோ, தற்போது தகவல் துறை அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, புதிய ஆளுநராகத் தமிழர் ஒருவரை நியமிக்க பிரதமர் தீர்மானித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

# எமது சுதந்திரத்தை நாமே பெறவேண்டும் போராட்டத்தின் இறுதி இலட்சியம் மாறாது

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை வடிவங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாளை அம்மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் ஆயுதங்களை நாம் தூக்குவோம். தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார், எமது இறுதி இலட்சியம் தமிழீழந்தான் என்று. போராட்ட வடிவங்கள் மாறலாமே தவிர எமது போராட்டத்தின் இறுதி இலட்சியம் மாற முடியாது.

இதற்காகவே நாம் ஆயுதங்களை கையளித்தோம். இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு மீண்டும் சமூகவிரோதக்கும்பல்கள் இம்மண்ணில் உலாவுகின்றன. புலிகள் இயக்கத்தின் கையில் நிர்வாகம் இருந்த காலகட்டத்தில் எந்த சமூகவிரோதக் கும்பல்களும் இந்தத் தமிழீழ மண்ணில் இருந்திருக்கவில்லை ஒரு கொள்ளை, கொலை இடம்பெறவில்லை. ஆனால் இன்று தினசரி கொள்ளை, கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இச்சமூக விரோதக் கும்பல்கள் முன்னரும் அதைத்தான் செய்திருந்தன. அதனால்தான் ஏனைய இயக்கங்களை புலிகள் இயக்கம் தடை செய்தது. இவர்கள் எமக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தார்கள் இந்திய ''றோ'' அமைப்பை நாம் பகிரங்கமாகவே சந்தேகிக்கின்றோம். பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டுகின்றோம். ''றோ'' அமைப்பு எங்களுக்கு எதிராக செயல்படுகின்றது. எங்களுக்கெதிராக செயற்பட்டு ஏனைய இயக்கங்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துள்ளது.

எம்மைக் கொல்வதற்கு பல திட்டங்களை 'றோ'' தயாரிக்கிறது. குறிப்பாக எமது தலைவர் பிரபாகரனைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளது. எனவேதான் இந்த றோ அமைப்பை நாம் பகிரங்கமாகவே சந்தேகிக்கின்றோம் பகிரங்கமாக குற்றம் கூறுகின்றோம்.

எம்மால் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் இந்தியாவில் இருளது. எம்மிடம்ஆயுதங்களைப் பறித்து சமூகவிரோத கும்பல்களுக்கு ஆயுதங்களை வழங்கி, சமூகவிரோதச் செயல்களை இந்தியா தூண்டியுள்ளது.

கொள்ளையர்களிடம் இருந்து எம்மக்களை பாதுகாப்பதற்காக நாம் கிராமரீதியில் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தோம். கொள்ளைகளை தடுப்பதற்காக நிறுவப்பட்ட நமது பாதுகாப்புக் குழுக்கள்கூட சமூகவிரோதக் கும்பல்களினால் தாக்கப்பட்டுள்ளன. அண்மையில் கொக்குவிலில் உள்ள குளப்பிட்டிஎன்னும் இடத்தில் மக்கள் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் தாக்கப்பட்டு கடத்தப்பட்டனர். ஆனால் இந்திய இராணுவத்தினர் அருகில் இருந்தார்கள். இந்திய இராணுவம் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. இவ்வாறாயின் நாம் எவ்வாறு அமைதிகாக்கும் படையினரென ஏற்றுக் கொள்ள முடியும்? இச்சமூக விரோதக் கும்பல்களுக்கு இந்திய இராணுவம் துணைபோவதாக உள்ளது நாம் தாக்கப்படும் போதும், கடத்தப்படும் போதும் இந்திய இராணுவத்துக்கு முன்பாகவே இவை இடம் பெறும்போது நாம்

> தியாகி லெப். கேணல் திலீபன், யாழ். கோட்டை முன்னால் நிகழ்த்திய புகழ்மிக்க பேச்சின் முக்கிய பகுதிகளை இங்கே தருகின்றோம்.

எப்படி பொறுமையாக இருக்க முடியும்? ஒன்றை மட்டும் நான் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் மரணத்திற்கு அஞ்சவில்லை வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டுமென்றோ ஆசை வைத்திருக்கவில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் தமிழீழ இலட்சியத்திற்காகவே போராடுகி

தயாராகவே இருக்கின்றோம். புலிகள் இயக்கத்தின் அடிப்படை வாசகமே அதுதான். எமது இறுதி மூச்சுவரை நாம் மக்களைப் பாதுகாப்போம் என்றுதான் அடிக்கடி குறிப்பிடுகின்றோம். மக்களுக்கு சுபீட்சமான சுதந்திரம் கிடைக்குமானால் நாம் மரணமாக தயாராக இருக்கிறோம்.

இதற்காக நாம் தற்கொலைப் படையைக் கூட உருவாக்கியுள்ளோம். இதனை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவமும் புரிந்து கொள்ள வேண்டும் அது மட்டுமல்ல சமூகவிரோதக் கும்பல்களுக்கு மிகவும் குறிப்பாக நான் கூறுகின்றேன். அதுவும் பகிரங்கமாகவே கூறுகின்றேன் நாம் வாயால் எதையும் கூறுவதில்லை. அவர்களுக்கே தெரியும் எமது நிலைமை பற்றி, நாம் குட்டக் குட்ட குனிபவர் இல்லை. இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று எங்களிடம் ஆயுதங்கள் இல்லைஎன்றவுடன் மிகப் பயங்கரமான அடாவடித்தனங்களில் இவர்கள் ஈடுபடுவதை மக்கள் அறிவார்கள். எமது தோழர்களை அநியாயமாக கொலை செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். நாம் தனித்து நின்று இச்சமூக விரோதக் கும்பல்களை ஒரு நாளில் தடை செய்தோம். அன்று எம்மிடம் நின்று எதிர்கொள்ள முடியாமல் ஒளித்து ஓடியவர்கள் எல்லாம் இந்திய இராணுவத்தின் உதவியுடன் இன்று வந்திருப்பதை எம்மால் சகிக்க முடியாமல் உள்ளது. மிகவும் மனவேதனையுடன் இதைச்சொல்லுகின்றேன்.

இதேவேளை ஒரு விடயத்தை தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்து மகா சமுத்திரத்தைப் பொறுத்த வரையில் இந்தியா பிராந்திய வல்லரசு நாடு. இதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இந்திய இராணுவத்திற்கு எதிராக அமெரிக்கா நிற்க முடியாது, என்பது எமக்குத் தெரியும் இந்தியஇராணுவம் சர்வ வல்லமை பொருந்திய இராணுவம் ஆனால் இந்திய இராணுவம் இலங்கை மக்கள் சக்திக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து

கள் மக்கள் மறியல் போராட்டங்களை நடத்தினார்கள்

சர்வவல்லமை பொருந்திய இந்திய இராணுவம் வடபகுதி முகாம்களில் இருந்தவேளை முகாமில் இருந்து வெளியே ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. ஏனெனில் மக்கள் எழுச்சியுடன் போராடினால் இந்திய நாட்டு இராணுவம் எதிர் நிற்க முடியாது

வியட்நாமைப் பொறுத்தவரை வியட்நாமிய மக்கள் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகவே போராட்டம் நடத்தினார்கள். இந்த அடிப்படையில் நாமும் எம்மைப் பொறுத்தவரை கூறுகின்றோம் எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி கொள்ள வேண்டும் இன்று கூட எம் மக்கள் மத்தியில் அந்தநிலை இல்லாதது எமக்கு வருத்தத்தைத் தருகின்றது ஆறாத சோகத்தை ஏற்படுத்துகின்றது. அந்த நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும் எமது அடிப்படை உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதற்காக நாம்எழுச்சி அடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் நாம் போராடினால், எவரும் இப்போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும். ஒன்றைக் கூறுகின்றேன். மக்கள் அனைவரும் முழுமையாகப் போராட்டத்திற்குத் தயாரானால் நிச்சயமாக தமிழீழத்தை அமைக்க முடியும் ஆனால் அந்த சூழ்நிலை இல்லாதது நமக்கு வேதனையைத் தருகின்றது. மக்களும் போராட்டத்தில் இணைய வேண்டும் என்பதை நாம் பல இடங்களில் வலியுறுத்திக் கூறியிருந்தோம்.

இன்று இந்தப் போராட்டத்தில் கூட எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் வெளியே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

நிலைமை மாற்றி அமைக்கப்படுவதன் ஊடாகத்தான்நாம் தமிழீழத்தை அமைக்க முடியும், என்று கூட நாம் கூறியிருந்தோம். இந்திய இராணுவத்திடம்ஏன் ஆயுதங்களைக்கையளித்தோம், என்ற மக்கள்,

யாது காலப்போக்கில் முழு மக்களையும் அணி திரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு. முழு மக்களையும் அணிதிரட்டி தமிழீழப் போராட்டத்தை வென்றெடுப்போம் என்ற நம்பிக்கையுண்டு.

இந்திய அரசும், இந்திய இராணுவமும், இலங்கை அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் முழுமையான மக்கள் சக்தி ஒன்று திரண்டால் எதுவுமே செய்ய முடியாது அடிப்படை உரிமையை வென்றெடுக்க நாம்தான் போராட வேண்டும். இதற்கு வேறுயாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நாமே எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும் இது வோர் அடையாள மறியல் போராட்டந்தான். இதைக் கூட நாம் பெரியளவில் செய்ய திட்டமிடவில்லை.

இப்போராட்டத்திற்கு எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்க வேண்டும். குறிப்பாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தார்கள்.

இவை மட்டுமல்ல, இவை போன்ற எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. நாம் ஒப்பந்தத்தை நிராகரிக்கின்றோம். அதேவேளை, தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன சிங்கள இராணுவம் இன்னமும் இன அழிப்பை புரிந்து கொண்டுதான் உள்ளது. எமது அடிப்படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக நசுக்கப்பட்டுநாம்நிரந்தர அடிமைகளாவதை விரும்பவில்லை.

இக்காரணங்களுக்காகவே நாம் இப்போராட்டத்தை தொடங்கியுள்ளோம். இவற்றுக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இப்போராட்டம் நிச்சயம் தொடரும். நான் மிகத்தெளிவாகக் கூறுகின்றேன். காலப்போக்கில் எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்திய இராணுவமும்

## கண்ணீர் அஞ்சலி



தமிழீழ மக்களுக்கு கடந்த 18 வருடங்களாக இரவு, பகலாக தன்னலமற்ற சேவையை ஆற்றிய சத்திரசிகிச்சை நிபுணர்

அமரர் வைத்திய கலாநிதி

### சுப்பிரமணியம் பொன்னம்பலம்

இரத்தம் வழிந்தோட  
இயமன் வந்தான் என ஏங்கி  
வருவோரை அரவணைத்தே  
மறு வாழ்வு தந்த மன்னா!  
நினைவுகளை விட்டு எங்கே  
சென்றுவிட்டாய் எங்கள் பொன்னா!  
மீண்டும் நீர் வருவீர் என்றிருக்க  
வேண்டாத செய்தி வந்தவிந்தை என்னே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டு அவரது உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயற்குழு, பணியாளர்கள்  
நோயாளர் நலன்புரிச்சங்கம்  
யாழ்ப்பாணம்.

(9462)

## கண்ணீர் அஞ்சலி



பட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் இந்தியாவில் இருந்த வேளை, இந்த றோ அமைப்புதான் இவர்களுக்கு ஆயுதம் வழங்கி எமது மண்ணிற்கு அழைத்து வந்துள்

த்த வரையில் தமிழீழ இலட்சியத்திற்காகவே போராடுகிறார்கள். எங்களைச் சுற்றி துப்பாக்கிகளும் இருப்புக் கம்பிகளும் நிமிர்ந்து நிற்கின்றன நாம் அனைவரும் மரணமாக

முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் டில்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்

திடம் ஏன் ஆயுதங்களைக்கையளித்தோம், என்றமக்கள், முழுநாட்களும் எம்முடன் நின்றிருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய நிலைஏற்பட்டிருக்க முடி

போக்கில் எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்திய இராணுவமும் இங்கிருந்து நகரமுடியாத நிலை ஏற்படலாம் அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஜனாதிபதி தேர்தல் வெற்றியில் நம்பிக்கையுடன் இருக்கிறோம்

**- ஐ தே.க. பொதுச்செயலர் காமினி விஜேசேகர**

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் வெல்லமுடியும். ஏனெனில் இது இருவருக்கும் இடையிலான நேரடிப் போட்டி என்பதாகும், இவ்வாறு ஐ தே. கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா சண்டே ஐலன்ட் இதழுக்கு பேட்டியளித்த போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதி தேர்தல் முடிவுற்ற பின்பு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை அசற்ற பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்க வேண்டியது அவசியமில்லை. அதற்குக் காரணம் எதுவும் இருப்பதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்காக ஐ. தே. க. நிறுத்தும் வேட்பாளரான காமினி திசாநாயக்கா மிகவும் அனுபவம் வாய்ந்தவர். மேலும் எதிர்பார்த்த மாற்றத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி வழங்க தவறியிருப்பதை மக்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர். இன்னும் இரு மாதங்களில் இது தொடர்பாக மேலும் உணரப்படும், வேலையற்றவர்களுக்கு மாதம் 2000 ரூபா வறுமை ஒழிப்புக்கு 25,000 ரூபா என்றவாறாகஎழுந்தமானமாக அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியை பாதிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுற்ற பின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதற்கு ஐ தே க ஆதரவளிக்குமா எனக் கேட்கப்பட்டபோது,

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கே காரணமில்லை. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சியை மாற்றுவதற்கு ஐ தே க, பகிரங்கமாக ஆதரவு தெரிவித்த நிலையில் ஜனாதிபதி தேர்தலே இடம்பெற்றிருக்க வேண்டியதில்லை பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கிய தேர்தல் பிரசாரமாக இது இருந்தது தெரிந்ததே ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு இது விடயத்தில் அரசுக்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம்அதன் பின்னர் அவ்வாறு சொல்வதற்கு காரணம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

# மட்டு. சோதனை சாவடியில் இராணுவக் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை வாகரை பிரதான வீதிகளில் இருக்கும்இராணுவ சோதனைச் சாவடிகளில் மக்கள் தொடர்ந்தும் கடினமான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். காயாங்கேணி, மாங்கேணி, மரமுந்திரிகைதோட்டச்சந்தி, பனிச்சங்கேணி போன்ற இராணுவச் சாவடிகளிலேயே பேருந்து வண்டிகளில் வரும் பயணிகள் நீண்டதூரத்திற்கு நடத்திக் கொண்டு செல்லப்படுகின்றனர். அத்துடன் மிகக் குறைந்தளவு பொருட்களே எடுத்துச் செல்லப்படுவதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர். இதனால் மக்கள் பெரிதும் துன்பமுறுகின்றனர்.

# வீடுகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள அரியாலை- பூம்புகார் நக்கீரன் குடியிருப்பில் தற்போது வீடுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு வருடங்களாக புனரமைப்பு ஏதும் செய்யப்படாமல் கிடந்த இவ்வீடுகள் இம்முறை மழை காலத்தை கருத்திற்கொண்டு புனரமைக்கப்படுகின்றன. சுமார் 48 வீடுகள் அமைந்துள்ள இக்குடியிருப்பினை அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (R R F.) நிர்வகித்து வருகின்றது. (22)

# கட்சிநிறுத்தும்வேட்பாளரை ஆதரிக்க வேண்டும்

**ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

கட்சியின் நலன் முக்கியம் என்பதால் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளரான காமினி திசாநாயக்காவை ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டும் இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். நெருக்கடியிலிருந்து கட்சியை விடுவிப்பதே முதல் பணி என்றும், கட்சியின் தலைமை கட்சியின் நலனுக்காகவே செயற்படுகிறது என்ற நம்பிக்கையுடன் தலைமைபற்றிய விமர்சனத்தை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வேலையற்றோருக்கு உதவி விரைவில் வழங்கப்படும்

(கொழும்பு)

விரைவில் வேலை இல்லாத இளைஞர், யுவதிகளுக்கு 1500 ரூபா வீதம் உதவி வழங்கப்படும் என காணி வனவள அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.


இவ்வாறான உதவி வழங்கப்படுவது பற்றி, பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல்விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்ததையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# கிழக்கு மாகாணத்தில் கல்வி அதிகாரி இடமாற்றம்

கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறை அதிகாரிகள் பலரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் யாவும் பாக்ஸ் மூலமாக மாகாண கல்வி அமைச்சு மூலம் வழங்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலுக்குப் பின்னர் செய்யப்படும் முதலாவது இடமாற்றம் இதுவெனக் கூறப்படுகிறது.

# பிரதமரின் செயலாளராக சூரவன்ச நியமனம்

சிறிலங்கா பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் பத்திரிகைத் துறை செயலாளராக பிரபல பத்திரிகையாளரான சூரவன்ச சிறிலால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பல புதினப் பத்திரிகைகளில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது-



**டாக்டர் எஸ். பொன்னம்பலம்**

**FRCS (Edin)**

தோற்றம்: 16.01.1928

மறைவு: 16.09.1994

இசை மழையில் செவி நனைய
இரத்தத்தில் உங்கள் கை நனையும்
மயக்கம் தெளிகையில் நோயாளர்
வாழ்த்துவார் உங்களை மனதார...

பேறு பெற்றோம் உங்களுடன்
சேவையில் இணைந்தமையால்
பெருகும் விழிநீரை துடைக்கவும்
வழியின்றி அழுகின்றோம்... ஐயா.
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

சத்திர சிகிச்சை நிலைய
வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள்.

(9460)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம் ஈழநாதம்
நல்லூர் கிளைநூலகம்.

**சிந்தனைக்கு..**

இதயத்தின் நிறைவில் இருந்துதான்
வாய் பேச வேண்டும்.

- இயேசுநாதர்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 20-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

# முடிமறைப்பது வினையாக முடியலாம்

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்று என அரசாங்கம் கூறிக் கொள்கின்றது. இதற்கான முயற்சிகள் சிலவற்றையும் அது மேற்கொள்வது போன்றும் தெரிகின்றது. அதேசமயம் அரசாங்கத்தின் இம்முயற்சிகள் குறித்து தொலைதொடர்பு சாதனங்களிலும், மக்கள் தொடர்பு சாதனங்களிலும் பெருமளவில் விளம்பரப்படுத்தப்பட்டும் வருகின்றது.

இதற்கு ஏற்றாற்போல், அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை விளக்கும் பொருட்டு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த வடக்கு-கிழக்கு இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்துவருவதோடு, இராணுவ மற்றும் ஆயுதப் படையினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டு வருகின்றார். இவ் உரையாடல்களில் இராணுவ அதிகாரிகள் தொடக்கம் சிப்பாய்கள்வரை சமாதானத்தின் மீதுள்ள சந்தேகங்கள் பற்றிக்கேள்விகள் கேட்பினும் இறுதியாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வெளியிடும் தகவல்கள் ஆயுதப் படையினர் சமாதானம் ஏற்படுவதையே விரும்புவதாகத் தெரிவிக்கின்றது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பிற்கு ஏற்றாற் போன்றே இராணுவ உயர் அதிகாரிகளும் சமாதானத் தீர்விற்கு இராணுவம் ஒருபோதும் முட்டுக்கட்டையாக இருக்க மாட்டாது எனவும், அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், இவர்களின் கூற்றுக்கள் யாவும் நடைமுறையில் முரண்பாடான செயல்களாகவே உள்ளன. ஏனெனில், வடக்கு - கிழக்கில் இராணுவம் அப்பாவித் தமிழ் மக்கள் மீதும், புலிகள் மீதும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திய வண்ணமே உள்ளன- அதாவது, இராணுவத் தரப்பு தமது போர் நடவடிக்கைகளை நிறுத்தியதாகவோ அன்றி தளர்த்தியதாகவோ இதுவரை தெரியவில்லை,

இதற்கு இராணுவத் தரப்பு யுத்தநிறுத்தமோ, போர் தவிர்ப்பு உடன்பாடோ எதுவும் நடைமுறையில் இல்லை எனக் காரணம் கூறலாம். ஆனால் இதனை இனப்பிரச்சினைத் தீர்விற்கு இராணுவத் தரப்பு வழங்கும் ஒத்துழைப்பு என்று எவருமே நியாயம் கற்பித்து

# 18 துப்பாக்கிகளே இதுவரை பொலிசாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருப்போர், அவற்றைக் கையளிக்குமாறு, பொலிஸ் திணைக்களம் கேட்டுக் கொண்டதற்கு. இதுவரை 18 துப்பாக்கிகளே ஒப்படைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

மேலும் 12துப்பாக்கிகளை பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்கான கால அவகாசம் முடிவடைந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சையில் சித்தி பெற்றும் நியமனம் இன்னுமில்லை

(கொழும்பு)

பொது எழுதுநர் சேவையின் முதலாம் வகுப்புக்கு பதவி உயர்வுக்கான தகவுத் திறன் காண் பரீட்சை 93, செப்டம்பர்மாதம் 25-ந்திகதி நடத்தப்பட்டது எனினும் இப்பரீட்சையில் சித்தியடைந்த 35 தமிழ் உத்தியோகத்தர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிரத கடவை ஊழியர் தொடர்ந்து அங்கலாய்ப்பு

பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கத்தின்மூலமாக தமக்குநிரந்தர நியமனம் கிடைக்குமாஎனப்புகையிரதக்கடவை ஊழியர்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர்

1989-ம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் நாடு முழுவதிலும் சுமார் 5400 பேர் ரயில்வே கடவை காப்பாளராக நியமிக்கப்பட்டு மாதாந்தம் ஆயிரம் ரூபா அலவன்சு வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

எனினும் இவர்களது நியமனம் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதுடன் பலருக்கு கொடுப்பனவுகளும் கடந்த பலமாதங்களாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு-கிழக்கு விருத்திக்கு கனடா உதவி வழங்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்பட்டால், தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கு கனடா உதவி வழங்கும் என இலங்கைக்கான கனேடிய தூதுவர் பென்கோரிஃலான்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைக்கு கனடா ஊக்கமளிக்கும். இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சமாதான தீர்விலேயே இலங்கையின் வளர்ச்சி தங்கியிருக்கிறது எனவும் அவர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்தார்.

# விளைவு எப்படி இருப்பினும் போட்டியிடுவது தேவையே

- காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

விளைவு எப்படியாக இருந்தபோதும் தேவை என்று ஏற்பட்டபோது போட்டியிட்டுத்தான் ஆக வேண்டும். இந்த அடிப்படையிலேயே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தேன் இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்க வேண்டும் என்றே விரும்பினேன். எனினும் சில வசதிக் குறைவுகளால் அவர் போட்டியிட முன்வராதபோது பாராளுமன்றக்குழுவில் இடம் பெற்றுள்ளவர்களில் எவரேனும் போட்டியிட முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அங்கிருந்த பலரும் என்னையே அதற்குப் பொருத்தமான வ

## அன்ரன் அல்பிரட் மேலதிக செயலாளரானார்

யாழ் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரான அன்ரன் அல்பிரட் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும், துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சில் செயலாற்றியவர் என்பது தெரிந்ததே.

## தையல் கண்காட்சி

பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பினை ஏற்படுத்துமுகமாக இலங்கை தேசிய சர்வோதயத்தின் சாவகச்சேரி பிரதேச நிலையத்தினால் நடாத்தப்பட்ட இலவச தையல்பயிற்சியைநிறைவு செய்த மாணவிகளின் ஆக்கமைப்பு பற்றிய தையல்கண்காட்சி அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரதேச இணைப்பாளர் திருமதி இராசமணி இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர் திரு பு: சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சர்வோதய பாலர் பாடசாலைகளின் பொறுப்பாளர் செல்வி கா. திலகராணி உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு பயிற்சியை நிறைவு செய்து கொண்ட மாணவிகளுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். (41)

## திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

தமிழரின் வாழ்க்கை நூலாகிய வள்ளுவனின் தெய்வத் திருக்குறளை சிறுவர்களின் மனதில் பதிக்கும் நோக்குடன் வாரிவளவு நல்லியக்கச் சபையினால் நடத்தப்பட்ட காரை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப்போட்டி கடந்த சனிக்கிழமையன்று வட்டுக்கோட்டை யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபர் திரு. ந பரமசிவம் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர், ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையிலான மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் மொத்தம் 83 மாணவர்கள் பங்குகொண்டனர். இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் விபரம் வருமாறு- ம காயத்திரி ஆண்டு 5 தொல்புரம் அ. மி த. க. பாடசாலை, சு சூரியகலா ஆண்டு 4 யாழ்ற்ரன் கல்லூரி, இ. ரவிபாலன் ஆண்டு 3 யாழ்ற்ரன் கல்லூரி, சு. சிவசூரியர் ஆண்டு 2 யாழ்ற்ரன் கல்லூரி த சிவதேவி ஆண்டு 1 யாழ்ற்ரன் கல்லூரி,

## தியாக சிகரத்தில் திலீபன்

பார் போற்றும் ஊரெழுவில்
பார்த்திபா நீ பிறந்தாய்
தித்திக்கும் தேன் தமிழோ
திக்கின்றி கிடந்ததையே நீ அறிந்தாய்
தமிழர் படும் வேதனையை
தமிழன் நீ உணர்ந்து கொண்டாய்

பள்ளிக்குச் சென்று வந்தாய் - வெட்டு
புள்ளி அங்கு விலை பேசின
உயர்கல்வி கற்றாலும்
உரிமையை நீ மறக்கவில்லை
தமிழர் படும்வேதனையை
தமிழன் நீ உணர்ந்து கொண்டாய்

பேனா பிடித்த கைகளை
பேய்களுக்கு பதில் சொல்ல மாற்றிவிட்டு
களம் பல கண்டாய்
கயவர் பலர் கதை முடித்தாய்
தமிழர் படும் வேதனைக்காய்
தமிழன் நீ உயிர்த்துக் கொண்டாய்

அகிம்சை பிறந்த நாட்டிலிருந்து
அந்நிய படைகள் வந்தன
தமிழர் தம் தாயகத்தை
தம் கையில் எடுத்துக் கொள்ள
தமிழரது நிலைமையினை
தமிழன் நீ உணர்ந்து கொண்டாய்

காந்தி தேச படைகள் முன்
ஏந்தி நின்றாய் அகிம்சை போர்
தமிழரெல்லாம் தலைவணங்க
உலகம் எல்லாம் உற்றுநோக்க
தலைவனது கொள்கையிலே
தமிழன் நீ உறுதிகொண்டாய்

பிறந்திருந்த அகிம்சையினை
பிணமாக்கி விட்டதய்யா பாரதம்
தியாகத்தின் சிகரத்திலே
திலீபா அமர்ந்து விட்டாய்
தமிழினத்தின் விடுதலைக்காய்
தமிழன் நீ உருகி விட்டாய்

உன் நாமம் போற்றி
உன் பாதையில் நடந்து
உன் இலட்சியக் கனவை
உலகில் படைத்திடவே - இந்நாளில்
உறுதி எடுத்துக் கொள்வோம்

- ராஜ்மோகன்

# பாக்.இற்கு மிக் விமானம் ரஷ்யா விற்பனை செய்யாது

(மாஸ்கோ)

பாகிஸ்தானுக்கு மிக் 29 ரக போர் விமானங்களை விற்பனை செய்ய ரஷ்யா மறுத்துவிட்டதாக மாஸ்கோவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் சுய பாதுகாப்பு என்ற போர்வையில் மிக் 29 ரக போர் விமானங்களை கொள்வனவு செய்ய முன் வந்திருப்பது குறித்து மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய ஆயுத விற்பனை அமைப்பின் தலைமை அதிகாரிஒருவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோவின் மாஸ்கோ விஜயத்தின் போது இது பற்றி எதுவும் பேசப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

# ஜெயலலிதா ஆட்சியை

போர் தவிர்ப்பு உடன்பாடோ எதுவும் நடைமுறையில் இல்லை எனக் காரணம் கூறலாம். ஆனால் இதனை இனப்பிரச்சினைத் தீர்வின்று இராணுவத் தரப்பு வழங்கும் ஒத்துழைப்பு என்று எவருமே நியாயம் கற்பித்து விட முடியாது.

போர் நிறுத்தம் நடைமுறையில் இல்லாது போனாலும், சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்க இராணுவம் விரும்பினால் தாக்குதல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். முதலாவதாக மக்கள் நிலைகள் மீதான தாக்குதல்களையும், புலிகளின் இலக்குகளைத் தேடிச் சென்று நடத்தும் தாக்குதல்களையும் நிறுத்திக் கொள்ள முடியும். சிலவேளை, நேரெதிர் அணிகள் சந்திக்கும்போது ஏற்படும் மோதல்கள் தவிர்க்க முடியாதவையாகப் போகலாம்.

ஆனால் அதனைச் செய்ய இராணுவம் தயாராக இல்லை என்றே அதன் அண்மைய நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன. பிரதமர் சந்திரிகா அரசாங்கம் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கிய பின்னரும் கூட வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் அன்றாட நிகழ்வாகி விட்டன. இதனால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்துமுள்ளனர். பெருமளவு உடமைகளும் நாசமாகியுள்ளன.

இதேபோன்றே புலிகளின் நிலைகள் மீதும் கடந்த காலத்தைப் போன்று இராணுவம் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்துகின்றது. இதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் வாவடி முன்மாரிப் பிரதேசத்திலுள்ள நெடுஞ்சேனைப் பகுதியில் இருந்த புலிகளின் முகாம் ஒன்றைக் கடந்த 15-ம் திகதி இராணுவம் தாக்கியதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இந்நிலையானது இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதை இராணுவம் விரும்பவில்லை என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. அதாவது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இராணுவம் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றே எண்ண வைக்கின்றது. மறுவளமாகக் கூறுவதானால் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் தனக்கு எதுவித சம்பந்தமும் கிடையாது, இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியற் தீர்வு என்பது பிரதமர் சந்திரிகா அரசாங்கத்தின் நிலைப்பாடே ஒழிய நமது அல்ல என இராணுவம் கூறுவதாகவே பொருள் கொள்ள வேண்டியுள்ளது

இந்நிலையில், சந்திரிகா அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவத்தின் நிலைப்பாட்டை மூடிமறைத்துவிட முனைவது தமிழ்மக்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்ற முனைவதற்கு ஒப்பானதாகும். ஆகையினால், இராணுவத்தின் நிலைப்பாட்டை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் அல்லது சமாதான முயற்சிகளுக்கு ஏற்புடையதாக இராணுவ சட்டமைப்பை மாற்றி அமைக்க முனைய வேண்டும். இதை விடுத்து இராணுவத்தின் உண்மைச் சொரூபத்தை மூடிமறைக்க அரசாங்கம் முனையுமானால் பின்னர் அதுவே அரசாங்கத்தின் சொரூபமாக கருதப்படுவதும் தவிர்க்க முடியாது போகலாம். இதனால் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு என்பதும் மறைந்து போகலாம்-

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்கா 'சண்டே ஐலன்' டிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் 44 வீதமான வாக்குகளை மட்டுமே பெற்ற ஐ.தே.க. ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவதற்குத் தேவையான 50 சதவீத வாக்குகளை எதிர்வரும் நாட்களில் சேகரித்து விடும் எனக் கருதுகிறீர்களா எனக் கேட்டபோது, அதற்குப் பதிலளிக்கையில், யாராவது ஒருவர் ஐ.தே.க. சார்பில் போட்டியிட வேண்டும் என்றே கூறினேன். தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக கட்சியினால் தெரிவு செய்யப்பட்ட தற்போதைய ஜனாதிபதி போட்டியிட கொண்டேன். ஆனால் அங்கிருந்த பலரும் என்னையே அதற்குப் பொருத்தமானவரெனக் கணிப்பிட்டபோது நான் அதனை ஏற்றுக் கொண்டேன். ஐ.தே.க. பொதுத்தேர்தலில் 44 வீத வாக்குகளை மட்டுமே பெற்றதும், ஐ.தே.கவில் பலரும் அதிருப்தியுடன் இருப்பதும் தெரியும். எனினும் அவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து பலம் வாய்ந்த ஐ.தே.க. வைக் கட்டி எழுப்ப முயல்கிறேன். எனத் தெரிவித்தார்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், தமக்கும் இடையில் கருத்து முரண்பாடு என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுக்கதை எனவும், ஐ.தே.கவின் நலனுக்காகவே இருவரும் பாடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பதவி துறப்பு

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து கே.பி சில்வா விலகியுள்ளார். உடல் நலக் குறைவு காரணமாகவே இவர் பதவி துறப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள போதும் கட்சிக்குள் நிலவும் உள் முரண்பாடுகளே இப் பதவி விலகலுக்குக் காரணம் எனத் தெரியவருகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக ராஜா கொலுரே நியமிக்கப்பட்டுள்ளார்.

## வடபகுதி மீனவருக்கான மீன்பிடித்தடையை நீக்கவும்

-டிக்சன் சில்வா

(கொழும்பு)

வடபகுதி மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மீன்பிடித் தடையை அரசு, நீக்க வேண்டும். வடபகுதி மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும், தேவையான உபகரணங்களையும் அனுப்பி வைக்க அரசு முன்வரவேண்டும் என முன்னாள் செனட்டரும், முன்னாள் மீன்பிடிக் கூட்டுத்தாபனத் தலைவருமான டிக்சன் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு, பேட்டியளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் வடபகுதி உற்பத்திகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்த வாய்ப்புகளை வழங்க வேண்டும். இதற்காக நாட்டின் தேசிய பிரச்சினையான இனப் பிரச்சினை எவ்வாறாயினும் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

...ற்ரன் கல்லூரி த. சிவதேவி ஆண்டு 1 யாழ்ற்ரன் கல்லூரி, க. கிரிஜா பாலர் வகுப்பு நவாலி இந்துமன்றப் பாடசாலை. (41)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.09.20
### செவ்வாய் இரவு

08.01 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ந. கிருஷ்ணா எழுதிய '' தியாகச் சுடர் '' வில்லிசை.

08.20 - நலந்தானா - விசர் நாய் கடியினால் ஏற்படும் ஆபத்துக்களுக்கு வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.

08.30 - செய்திகள்

08.40 - கருத்துக்களம் - '' சிந்தனை ''

08.50 - களமும் கானமும் - மலரன்னை எழுதிய '' கடலும் கலக்கமும்''

### 1994.09.21
### புதன் காலை

07.02 - மாவீரவணக்கம்

07.15 - நீங்கள்கேட்டவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ஜெராட் எழுதிய '' புயலிடம் நீதி கேட்ட பூங்காற்று ''

## ஜெயலலிதா ஆட்சியை அகற்றும் வரை தூங்கேன்

- சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

ஜெயலலிதாவை ஆட்சியை விட்டு அகற்றும்வரை நிம்மதியாக தூங்க மாட்டேன் இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சரும் ஜனதா கட்சித் தலைவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்-

மதுரை மேலமாசி வீதியில் நடந்த கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்.

முதல்வர் ஜெயலலிதாவினால் தமிழகத்தின் கலாசாரம் பண்பாடு ஆகியவை சீரழிந்துவிட்டன தமிழகமே வெட்கித் தலை குனிகிறது

தமிழகத்தின் முன்னாள் ஆளுநர், உயர் நீதிமன்ற நீதிபதி ஆகியோர் கூட ஜெயலலிதாவின் பஞ்சப் பணத்திற்கு அடிமையாகி விட்டனர் எனவும் தெரிவித்தார்.

## உலகில் செக்கனுக்கு 4 குழந்தைகள் பிறப்பு

(கெய்ரோ)

கெய்ரோவில் கடந்த எட்டு தினங்களாக நடந்துமுடிந்த ஐ.நா சனத்தொகை மகா நாட்டு வேளையில் உலகம் முழுவதிலும் 3,056,000 குழந்தைகள் பிறந்துள்ளன.

எட்டுத் தினங்கள், எட்டு மணித்தியாலம், 45 நிமிடங்கள் இம்மாநாட்டுக்கு செலவிடப்பட்டது.

இதேவேளையில் உலகம் முழுவதிலும் பிறந்த மேற்படி குழந்தைகளின் எண்ணிக்கையில் ஒரு செக்கனுக்கு நான்கு குழந்தைகள் வீதம் பிறந்திருப்பது தெரியவந்துள்ளது.

## அதிக விடுமுறை தினங்கள் இலங்கையிலேயே உள்ளது

(கொழும்பு)

உலகிலேயே அதிகளவு விடுமுறை தினங்கள் கொண்ட நாடாக இலங்கை விளங்குகிறது. இதனால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது, என இலங்கை ஐக்கிய வர்த்தக சம்மேளனத் தலைவர் பற்றிக் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தலைவர்களை நினைவு கூரவேண்டும். ஆனால் நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்த அவர்கள் தம்மை நினைவு கூருவதற்கான ஓய்வுதினம் பிரகடனம் செய்வதை விரும்ப மாட்டார்கள். நாட்டில் தேர்தல் காலங்களில் தொடர்ந்து விடுமுறைகள் அறிவிக்கப்படுவதினால் நாட்டிற்கு பல மில்லியன் ரூபாய்கள் வரை நட்டமேற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக் கழகத்தில் முகாமையியல் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தில் 'முகாமையியல் துறை' என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இப்புதிய துறை உருவாக்கத்திற்கு பெரும் பங்காற்றியதாக அறிய வருகின்றது.

1976 முதல் வணிக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதும், அவர்கள் பொருளியல் துறையின் கீழேயே கல்வி கற்றனர். 1980 களின் ஆரம்பத்தில் அவர்களுக்கென வணிகத்துறை ஒன்று உருவாக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின் வணிகத்துறையுடன் முகாமையியல் துறையும் சேர்ந்து, வணிக முகாமையியல் என்ற பெயரில் இதுவரை காலமும் இயங்கி வந்தது. இத்துறை கலைப்பீடத்தில் ஏறக்குறைய அரைப்பங்கு மாணவர்களைக் கொண்ட பெருந்துறையாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து முகாமையியல் துறை வணிகத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு தனித்துறையாக இயங்க பல்கலைக்கழகப் பேரவை அனுமதியளித்துள்ளது. இந்நிலையில் தற்போது வணிகத்துறை கலைப்பீடத்தில் அதிக மாணவர்களைக் கொண்ட பெரும் துறையாக விளங்குகின்றது. புதிய முகாமையியல் துறைக்கு, வணிக முகாமையியல்துறையின் முன்னாள் தலைவர் திரு. எம். நடராசசுந்தரமும், வணிகத் துறைக்கு திரு. கே. தேவராஜாவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7.00 மணியளவில் யாழ் / பொது வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்ளுகின்றார். (21)

# ஹெயிட்டி இராணுவ தலைவர்கள் பதவி விலகச் சம்மதம்

ஹெயிட்டி நாட்டின் சர்வாதிகார இராணுவ அரசை ஒடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க இராணுவ நடவடிக்கை நேற்று இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. ஹெயிட்டி நாட்டை தமது பிடிக்குள் வைத்திருக்கும் மூன்று இராணுவத் தலைவர்களும் அக்டோபர் 15ம் திகதிக்குள் பதவி விலகி மீண்டும் ஜனாதிபதியாக பொறுப்பேற்க ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்தும் ஹெயிட்டி நாட்டின் அமெரிக்க இராணுவ ஊடுருவல் நடவடிக்கை கைவிடப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டன் அறிவித்துள்ளார்.

முன்னதாக ஹெயிட்டிக்குள் ஊடுருவ அமெரிக்க இராணுவத்திற்கு கிளிண்டன் உத்தரவிட்டதைத் தொடர்ந்து 61 அமெரிக்கப் போர் விமானங்கள் ஹெயிட்டி மீது தாக்குதல் நடத்த சென்றுகொண்டிருந்தபோதே அவர் தாக்குதலை கைவிடும்படி மறு உத்தரவைப் பிறப்பித்தார் என்றும் இதனால் போர் விமானங்கள் தளத்திற்கு திரும்பி விட்டதாகவும் கூறப்படுகிறது

அமெரிக்க தரப்பில் இறுதிக்கட்ட பேச்சு வார்த்தையில் ஈடுபட வந்திருந்த அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி காட்டரின் குழுவிற்கும் ஹெயிட்டி இராணுவத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதிக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஹெயிட்டியில் பதவி விலக தயாராக உள்ள மூன்று இராணுவத் தலைவர்களும் ஹெயிட்டியை விட்டு வெளியேறக் கூடும் எனத் தெரிகிறது.

இதேவேளை ஹெயிட்டியில் சர்வதேச அமைதி காக்கும் படை நிறுத்தப்படவும் அமெரிக்க ஹெயிட்டியின் இராணுவ தலைவர்களுக்கு இரகசியமாக பல கோடி ரூபாவை வழங்க ஒப்புக் கொண்டிருப்பதாகவும் நியூஸ் வீக் பத்திரிகை தெரிவித்துள்ளது.

எனினும் ஹெயிட்டி நாட்டில் சர்வதேசப் படை அமைதி காக்கும் பணியில் நிறுத்தப்படுவதை ஹெயிட்டி இராணுவம் எதிர்க்கும்என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## நங்கூரம் அறிவியல் ஏடு 2-ம் ஆண்டு பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நங்கூரம் அறிவியல் ஏட்டின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழா நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றல், அமைதி வணக்கத்துடன் விழா ஆரம்பமானது. நங்கூரம் இரண்டாம் ஆண்டு அறிவியல் ஏட்டை தமிழீழவிடுதலைப் புலிகள் உறுப்பினர் வே. பாலகுமாரன் வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார். முதல் பிரதியை செல்வன் அன்ரனியூட் பெற்றுக் கொண்டார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து கலை டண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆசியுரையை நிகழ்த்தினார். அடுத்து தலைமையுரையும் வெளியீட்டுரையும் நடைபெற்றதைத் தொடர்ந்து பரிசில் அளிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. தொடர்ந்து கலை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (சி), (பா)

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களின் ஆறாம் நளான இன்று வட்ட ரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறுகின்றன இந் நிகழ்வுகள் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

இந் நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில், உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் வர்த்தகர் சங்கம் சுன்னாகம், சிறீகாளி ச. ச நிலையம், சிவசக்தி ச, ச நிலையம், காமாட்சி அம்பாள் ச. ச- நிலையம், என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் சங்கானை சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடியில் பண்டத்தரிப்பு சிற்றூர் மக்களும் கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசுவாமி கோவில் முன்றலில் நீர்வேலி இ-த-க- பாடசாலை, சரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், ஆர்சி- பாடசாலை, சிறுப்பிட்டி அ-மி-த-க- பாடசாலை, தேன்துளி உற்பத்திக் குழு, நீர்வேலி ச, ச- நிலையங்களும் யாழ், நல்லூர் வட்டங்களில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில். யாழ்ப்பாண மாநகரசபை, அத்தியடி மாதர் சங்கம் என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில், வேலணை சரஸ்வதி வித்தியாலயம். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், வள்ளியம்மை வீரகத்தி வைரவர் கோவிலடி குடியிருப்புகள் என்பனவும் கலந்து கொள்ளவுள்ளனர்-

வடமராட்சி கோட்டம் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில் புலோப்பளை ப- நோ. கூ- சங்கம், பருத்தித்துறை தெ. ப- பொ- கூ- சங்கம் என்பனவும் கரவெட்டி வட்டத்தில் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோவிலடியில் கரணவாய் மத்திய மகாவித்தியாலயம், பொன்னம்பல வித்தியாலயம் என்பனவும் உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில் அம்பிகை ச- ச- நிலையம், கலையரசி ச. ச. நிலையம், கலைமகள் ச. ச. நிலையம், விவேகானந்தா ச. ச. நிலையம், கொம்மாந்துறை ச. ச. நிலையம் என்பனவும் கலந்து கொள்கின்றன.

தென்மராட்சி கோட்டம், கைதடி வட்டத்தில் கைதடிச் சந்திக்கு அருகாமையில் மின்னொளி ச. ச. நிலையம், காந்தி ச.ச, நிலையமும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் சரசாலை மட்டுவில், மட்டுவில்நுணாவில் சிற்றூர்தி ஒன்றியம், சமூக மேம்பாட்டு ஆசிரியர்களும், கொடிகாமம் வட்டத்தில் 190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கருணாபுரம் மந்துவில், சின்னச்சந்தையடி, மரக்கார் ச. ச. நிலையம், புத்தூர்சந்தி வர்த்தகர்சங்கம் என்பனவும் பளைவட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் அரசன் குடியிருப்பு, புலோப்பளைமேற்கு மக்கள், பிரதாபன் ச. ச. நிலையம் என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன,

மேலும் கடற்புலிகள் பிரதேசத்தில் குருநகர் மேல் மாதா கோவில் மண்டபம், தொண்டமனாறு காட்டுப்புலம், மருதங்கேணி சந்தி, உடுத்துறை வடக்கு ஆகிய இடங்களிலும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

## சேவையை சிறப்பாக செய்த ஆசிரியருக்குபுலமைப்பரிசில்

(கொழும்பு)

சேவையை சிறப்பாகச் செய்த ஆசிரியர்களுக்கு, புலமைப் பரிசில்கள் வழங்கும் போது முதலிடம் வழங்கப்படும் என கல்வி, உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புலமைப் பரிசில்கள் வழங்கும் போது சாரண இயக்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

பாடசாலைப்பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் நாட்டம் காட்டுவோருக்கே, இப் புலமைப் பரிசில்கள் பயனளிக்கக் கூடிய வகையில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசில் வழங்கி கௌரவம்

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் இருந்து முதன்முதலாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட செல்வி கோபாலபிள்ளை கேதாரகௌரிக்கு அமரர் திரு. அ. சின்னையா நினைவுப் பரிசிலை அன்னாரது மகள் திருமதி செ. இரத்தினசபாபதி அண்மையில் வழங்கிக் கௌரவித்தார். (24)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாகேசரி ஆ, தம்பித்துரை அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 3 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

## தபால் வாக்களிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## எதிர்வரும்

கிரஸ் ஐ தே. கவுடனான உறவை முறித்துக் கொண்டால் பதுளை, நுவரெலியா கண்டி போன்ற மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணிதான் பெரிய ளவிலான வாக்குகளை பெற்றுக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை ஐ. தே கவிற்குள் தற்போது நடைபெறும் பதவிப் போட்டிகளினால் வாக்காளர் மத்தியிலும் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியிலும் கட்சி தொடர்பான அவநம்பிக்கை எழுந்துள்ளமையைக் காணக்கூடியதாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பத்திரிகை அறிவிப்பின்படி வட்டி வழங்க வில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் பத்திரிகைகளில் அறிவித்தது போன்று துவிச்சக்கர வண்டி பெற்றுத் தருவதாகக் கூறிப் பெற்ற பணத்திற்கு வட்டி வழங்க வில்லை என துவிச் சக்கர வண்டிக்குப் பணம் செலுத்தியோர் பிரதிநிதிகளின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

வட்டி செலுத்தப்படும் எனக் குறிப்பிட்ட பின்னர் ஊழியர்சங்கத்தலைவர் வட்டி பற்றி எதுவும் குறிப்பிடாது பணத்தைச் செலுத்த முயன்றபோது தாம் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும், அதன் பின்னர் தாம் விளக்கம்கோரி அனுப்பிய கடிதத்திற்கும் பதில் தரப்படவில்லை எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதன் பின்னர் கட்டிய பணம் 5000 ரூபா மட்டும் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டது எனவும் இதற்கான காசோலைகளில் பெறுவோன் கணக்கு மட்டும் 'கைமாறத்தகாதது' போன்ற குறிப்புக்களை கொண்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

போது அவ்வதிகாரி இக் காசோலைக்கு பணம் பெறுவதற்கு ஒரு துறைத் தலைவர் மூலம் ஏற்பாடு செய்ததோடு பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் வட்டி வழங்கப்படாமை குறித்து பத்திரிகை மூலம் அறிக்கை விடுவதாக உறுதியளித்திருப்பதாகவும் கூறினார்-

ஆனால் பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் அவ்வாறு எதுவும் செய்யாது தற்பொழுது கடமை லீவில் கொழும்பு சென்றுவிட்டார்- எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

ஐ தே க இல்லாமையே இத் தோல்விக்குக் காரணமாகும். கட்சியின் பலவீனமான தலைமையினாலேயே மக்கள் அதன் மீது நம்பிக்கையிழந்தனர் இதனாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது என்றார்.

யார் வேண்டுமானாலும் கட்சி மாறும் உரிமை அவர்

கொக்குவில் மேற்கு - மணியர்பதி
ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி
தேவஸ்தான பரிபாலன சபை

அன்புடையீர்,

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் 18-09-94 மாலை 3 மணிக்கு

## தியாகி திலீபன் நினைவு

அன்புடையீர்,

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் 18-09-94 மாலை 3 மணிக்கு நடைபெற்றது. அதற்கு மத்தியஸ்தர்களாக கொக்குவில் மத்தி மேற்கு கிராமசேவையாளரான திரு. N. தவநேசனும், கொக்குவில் தெற்கு மேற்கு கிராம சேவையாளரான திரு. T. இரட்னேஸ்வரனும் கடமையாற்றினர். அக்கூட்டத்தில் பின்வருவோர் பரிபாலனசபை அங்கத்தவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

| தலைவர்: | உ. தலைவர்: |
|---|---|
| திரு. பொ. முத்துக்குமாரு | திரு. சு. சண்முகநாதன் |
| செயலாளர்: | உ. செயலாளர்: |
| திரு. சி. அன்னலிங்கம் | திரு கு. தெட்சணாமூர்த்தி |
| பொருளாளர்: | உ. பொருளாளர்: |
| திரு. இ. சிறீகாந்தா | திரு. ம. க. குகதாசன் |

நிர்வாகசபை உறுப்பினர்களாக:

| | |
|---|---|
| திரு. சி. கு. சுப்பிரமணியம் | திரு. தே. ஜெயகுமார் |
| திரு. பொ. சிவரத்தினம் | திரு வி. ஞானசொரூபன் |
| திரு. நீ. கிருபாகரன் | திரு. சி. சிவசுப்பிரமணியம் |
| திரு. நா. பத்மராஜா | திரு. சி. சிறீகாந்தா |

திரு. து. பத்மராஜ்

பேரசகர்கள்: N. தவநேசன் கிராம சேவை அலுவலர்
T. ரட்னேஸ்வரன் கிராமசேவை அலுவலர்

பரிசோதகர்: இ. செல்வநாதன்

(சி-10378) - தலைவர்

பாஷையூர் - கொழும்புத்துறை - மணிப்புரி

## வர்த்தக சங்கம் நடாத்தும்

# உண்ணாவிரதம்

லெப். கேணல் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி எமது சங்கம் எதிர்வரும் புதன்கிழமை (21-9-94 இல்) பாஷையூர் அர்ச். அந்தோனியார் தேவாலய முன்றலிலும் வியாழக்கிழமை (22-9-94 இல்) கொழும்புத்துறை சந்தை முன்றலிலும் உண்ணாவிரதம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இவ்வுண்ணாவிரதம் இத்தினங்களில் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும். உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களுக்கு அண்மையிலுள்ள எமது சங்க உறுப்பினர்களை அவ்வத்தினங்களில் தமது வர்த்தக நிலையங்களை முழுமையாகப் பூட்டி உண்ணாவிரதத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ஆ. சாந்தலிங்கம் | | ச. தவசீலன் |
| தலைவர் | (9469) | செயலாளர் |

காணக்கூடயதாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசாங்கத்தின்

வார்த்தைக்கு வெளியே இருந்து வரும் எதிர்ப்பை கட்டுப்படுத்திகொள்ளகூடியதாக அமையும் என்றார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான திட்டத்தை நான் முன்வைத்த போது அதற்கான ஒரு தெளிவான, முழுமையான ஒத்துழைப்பை ஐ தே. கட்சி எனக்குத் தரவில்லை, ஆகுவேதான் நான் முன்னர் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. அன்று நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தால் இரு தரப்பினர் இடையேயுள்ள பிரச்சினை தொடர்பாக ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியிருக்க முடியும் என நான் கருதுகிறேன் என தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இப்பேச்சுவார்த்தை தொடர்பாக உங்களுடன் தொடர்பு கொண்டார்களா? என ''திவயின'' நிருபர் கேட்டதற்கு இதுவரை அப்படியான எவ்வித தொடர்பையும் பொதுஜன ஐக்கிய முன்னணி தன்னுடன் கொள்ளவில்லையென்றும் இனிமேல் அப்படியான ஓர் உதவியை கேட்பார்களானால் அதற்கு தன்னால் ஆன உதவியை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பெரியளவிலான பேச்சுவார்த்தையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளமை மிகவும் தெளிவாக தெரிகின்றது, என்னுடைய அனுமானிப்பின்படி நான் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டவாறு இவர்களும் நடந்துகொள்ளுகின்றார்கள், எனவே இப்பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமான முறையில் அமையும் என்றே எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# தியாகி திலீபன் நினைவு இரவு கலை நிகழ்ச்சிகள்

தியாகி திலீபன் நினைவு நாள்களில்வட்டரீதியாகநடைபெற்றுவ்ரும் இரவுநேர கலை நிகழ்வுகள் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்வுகளில் இன்று, வலிகாமம் கோட்டம் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் வாத்திய விருந்து, பேச்சு, தொடரும் பயணங்கள் (நாடகம்), கிராமிய நடனம் என்பனவும், சங்கானைவட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் தாளலயம் உடுவில் வட்டம்), தாயகமே தாகம் (நாடகம்), கரகம், கோலாட்டம் என்பனவும், சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில், நாதஸ்வரம், பேச்சு, சிறை (நாடகம்), காவடி, கும்மி என்பனவும் கோப்பாய் வட்டம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் வாய்ப்பாட்டுக் கச்சேரி, வாழவைத்தமண் (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், நல்லூர், யாழ் வட்டங்களில், நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் வயலின் இசை, பேச்சு, விடியலைத்தேடி (தீவக நாடகம்) கோலாட்டம், கும்மி என்பனவும் இடம்பெறவுள்ளன.

தீவக கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் (மாம்பழம் சந்தி) தாகம் (நாடகம் உடுவில் வட்டம்) அபிநய நடனம், கும்மி என்பன இடம்பெறவுள்ளன.

வடமராட்சிக் கோட்டம், உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி சந்தி வைரவர் கோவிலடியில் பேச்சு, கவியரங்கு (பருத்தித்துறை வட்டம்), கலைஞனின் தாகம் (நாடகம்), கோலாட்டம் என்பனவும் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில் பேச்த, வில்லுப்பாட்டு (தம்பிநாதன் குழு), தர்மதேவதை (நாடகம்), கும்மி, காவடி என்பனவும், கரவெட்டி, வட்டத்தில் துன்னாலை கலிகைக்கந்தன் ஆலய முன்றலில் இனியொரு விதி செய்வோம் (நாடகம்), வில்லுப்பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில், பேச்சு, கோலாட்டம், உரிமைத்தேர் (நாடகம்) காவடி என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில், பேச்சு, வயலின் கச்சேரி, அனலாகும் பிறவிகள் (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், கொடிகாமம் வடடத்தில் பேச்சு, கயிற்றுக்காவடி, நெஞ்சம் மறக்குமா? (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், பளைவட்டத்தில் இரட்டைல் கேணி அம்மன்கோவிலடியில் பேச்சு, புதிதாய் எழுவோம் (நாடகம்), ஒளி பிறந்தது (நாடகம்), அபிநய நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இது குறித்து தாம் பல கலைக் கழக அதிகாரி ஒருவரைச்சந்தித்துவிளக்கம்கோரிய

## ஐ தே கவில்

பம் ஐ. தே. க. பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தற்போது அவ் விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலை

டர்ந்ததாகவும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் எடுத்த நடவடிக்கையை அடுத்த அந்த நபர் மாடியிலிருந்து குதித்து ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது-

வேறொருதடவைரணில்விக்கிரமசிங்கதங்கியிருந்த அறைப்பகுதியில் இனம் தெரியாத நபர் ஒருவர் நடமாடித்திரிந்ததாகவும் பின்னர் அவர் வெளியேறி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

## தியாகி

லில் திலீபனின் நினைவுகூரும் கவிதை, கட்டுரை, பேச்சு, வில்லுப்பாட்டு போன்ற கலைநிகழ்வுகளும் கும்மி, நடனம், நாட்டியம் போன்ற நடன நிகழ்வுகளும் இடம்பெற்றுவருகின்றன. இரவு பத்துமணிவரை விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. (யோ)

## வடகிழக்கு

தொடர்புடைய விடயங்களுக்கு மட்டுமே உலகவங்கி இனிமேல் உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

யார் வேண்டுமானாலும் கட்சி மாறும் உரிமை அவர்களுக்குள்ளது. எனவேதான் தேர்தல் நாட்கள் நெருங்க நெருங்க பலர் கட்சி மாறினார்கள், அவர்களை கட்டாயப்படுத்தி தேர்தல் வேலைகளில் ஈடுபடுத்த முடியாது.

நல்ல அனுபவம் ஆற்றல் படைத்த பண்பானவர்கள் இன்னும் கட்சியுடன் இருக்கின்றார்கள். இவர்களில் அதிகமானவர்கள் என்னுடன் நீண்ட காலமாக இணைந்து சேவையாற்றியவர்கள். எனவே அவர்களுக்கு தெளிவாக தரியும் இந்த தோல்வி ஏன் ஏற்பட்டது என்று. எனவே இவர்கள் இதனை விரும்புவார்கள் என நான் நம்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்,


# விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன் தாள், சொப்பிங் பேக், நயிலோன் கயிறு, பிளாஸ்ரிக் யொக், பிளாஸ்ரிக் வாட்டர் யொக், பிளாஸ்ரிக் பேசன், கோழிக் கூடு வலை, அல்மெனியம், தாச்சி, எனாமல் பெயின்ற் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

**நாதன் களஞ்சியம்,**
213, கேணல் கிட்டு சாலை,
மருத்துவமனை வீதி,
யாழப்பாணம்.

(9465)



**யாழ். ஸ்ரீதரில்**

இன்று முதல்

தினசரி காலை 10-30, மாலை 4-00, 6-00 மணி

## இனியொரு விதி

## இதனுடன் ஒபறேசன் தவளையும்

[பூநகரிச் சமர்]

காண்பிக்கப்படும்.

(சி-10377)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு சப்ரெம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது